**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், மாசித்திங்கள் 08 ம் நாள்

**இ.ம.எண். 2/2025**

**in**

**அ.வ.எண்.49/2022**

1. ஈஸ்வரி
2. செல்வக்குமார்
3. செல்வி
4. ஜோதிராஜ்

... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

D.சிவக்குமார் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 06.02.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.நிர்மல்குமார், M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.வெங்கடசுப்பு, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்துவந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தற்போதைய ஆணையரையோ அல்லது புதிய ஆணையரையோ நியமித்து சேனாபதிபாளையம் கிராம நிர்வாக அதிகாரி

மற்றும் குறுவட்ட அளவையர் ஆகியோர் உதவியுடன் வழக்கு சொத்தை அளவுகள் செய்தும், இயற்பியல் தன்மைகளை குறிப்பிட்டும் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 10(3) பிரிவு 151 ன் படி இம்மனுதாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

i) தாவா பாதை என்பது தென்வடல் 13 அடி அகலத்திற்கு குறையாமலும், 15 அடி அகலத்திற்கு மிகாமலும் கிழமேல் வண்டிப்பாதையாக இருக்கிறது என்பதையும், அதன் தென்புற எல்லையாக இருந்த உயிர் வேலியை (கிழுவ மரங்களாலான உயிர்வேலியை) மிகச் சமீபத்தில் அகற்றிவிட்டு, க.ச எண்.1050/2 ன் வடக்கு எல்லையில் அதாவது ஏற்கனவே இருந்த உயிர்வேலியைக் காட்டிலும், வடக்கே தள்ளி எல்லையில் கம்பி வேலி அமைத்து, வாதியின் நிலத்தில் இருந்த 6 அடி அகலப் பாதையை முற்றிலுமாக ஆக்கிரமித்துள்ளார் என்பதை தமது அறிக்கையில் குறிப்பிடாமல் தவிர்த்துள்ளார்.

ii) எதிர்மனுதாரர்/வாதி O.S.No.317/2010 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக 2ம் மனுதாரரின் தாயார் காங்கயம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த A.S.No.63/2017 மேல்முறையீட்டு தீர்ப்பு ஏற்பட்ட பிறகு 2ம் மனுதாரரின் தாயார் பெற்ற தீர்ப்பின் பலனை அடைந்துவிடக் கூடாது என்று கம்பி வேலி அமைத்து, சட்டவிரோதமாகச் செயல்படுகிறார். தனது சட்டவிரோத செயலை நியாயப்படுத்தும் நோக்கில் இந்த அசல் வழக்கைத் தாக்கல் செய்து, ஒரு தலைப்பட்சமாக ஆணையர் அறிக்கையைப் பெற்றுள்ளார்.

iii) மேற்படி காங்கேயம் சார்பு நீதிமன்றம் A.S.No.63/2017 மேல்முறையீட்டு வழக்கு தீர்ப்பாணையில் க.ச.எண்.1052 நெ.காலையில் தெற்குக் கோட்டிலும், க.ச.1050/2 நெ.காலையின் வடக்கு கோட்டிலும் அதாவது இரு காலைகளிலும் சேர்ந்தார் போல் மேற்கே க.ச.1051/1 காலை வரை வரும் 13 அடி கிழமேல் பாதை உள்ளது என்று தீர்ப்பு பகரப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்புக்கு மாறாக ஆணையர் அவர்கள் தமது அறிக்கையில் நிலவியலில் வண்டிப்பாதையாக இருப்பதை வண்டிப்பாதை என்று குறிப்பிடாமல் மண் தடம் என்று குறிப்பிட்டுள்ளார். அதன் நீளம், அகலம் பற்றி அறிக்கையில் யாதொரு விபரமும் இல்லை. அசல் வழக்கில் மனுதாரர்களும் வழக்கறிஞர் மூலம் தோன்றிய பிறகு, இரு தரப்பிற்கும் அறிவிப்பு கொடுத்துவிட்டு தமது நிலவியல் ஸ்தலப் பார்வை செய்திருந்தால், மனுதாரர்கள் தரப்பு நியாயத்தையும், வழக்கிற்கு சம்பந்தப்பட்ட பொருண்மைகளை அறிக்கையில் குறிப்பிடவும் குறிப்புரை கொடுக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

iv) எனவே இந்த வழக்கில் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையரை அல்லது புதிய நீதிமன்ற ஆணையரை நியமித்தோ வழக்குச் சொத்துக்களை கிராம நிர்வாக அதிகாரி மற்றும் குறுவட்ட அளவர் (சர்வேயர்) உதவியுடன் அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டியுள்ளது. இல்லாவிட்டால் மனுதாரர்களுக்குப் பெருத்த கஷ்டமும் ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்பட்டுவிடும். எனவே தற்போதைய ஆணையரையோ அல்லது புதிய ஆணையரையோ நியமித்து சேனாபதிபாளையம் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் குறுவட்ட அளவையர் ஆகியோர் உதவியுடன் வழக்குச் சொத்தை அளவுகள் செய்தும், இயற்பியல் தன்மைகளைக் குறிப்பிட்டும் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை சுருக்கம்:–**

i) மனுதாரர்கள் மனு பொய் மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிர்மனுதாரர்/வாதி இவ்வெதிர் உரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர மனுவில் கண்ட மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபனம் செய்ய வேண்டியது.

ii) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனு சொத்தை நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து அறிக்கை வரைபடம் தாக்கல் செய்ய கோரியுள்ள மனு ஏற்புடையதல்ல. காங்கயம் சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு தீர்ப்புரையில் அந்த வழக்கில் ஆணையர் அளவீடு செய்து இரண்டு பக்க உயிர்வேலிக்கு இடையில் தாவா தடத்தின் அகலம் 13 அடி என்பதை குறிப்பிட்டு அதை இரு தரப்பினரும் அனுபவித்துக்கொள்ள வேண்டும் என்றும் அந்த தட அனுபவத்திற்கு வடபுறமும் தென்புறமும் உள்ள உயிர்வேலியின் மரிசுகள் தடத்திற்குள் புகுந்து இடையூறு விளைவிக்காத வண்ணம் இரு தரப்பினரும் தங்கள் பகுதி உயிர்வேலியை தக்க முறையில் பராமரித்து வர வேண்டியது என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளது. மேற்படி தாவா தடத்தை தான் இவ்வழக்கு ஆணையர் மண் தடம் என குறிப்பிட்டுள்ளார். வண்டிப் பாதையை மண்தடம் என ஆணையர் குறிப்பிட்டுள்ளது சரியானதல்ல என மனுதாரர்கள் கூறுவது ஏற்புடையதல்ல.

iii) எதிர்மனுதாரர் தாவா தாக்கல் செய்தபோது தாவா சொத்தை பார்வையிட ஆணையர் நியமனம் பெற்று தாவா சொத்தை ஆணையர் கடந்த 02.03.2022 ம் தேதி அன்று நீதிமன்ற உத்திரவுப்படி பார்வையிட்டார். தாவா சொத்து பகுதியில் பிரதிவாதிகள் வீட்டில் 1 முதல் 3 பிரதிவாதிகள் இருந்தார்கள். அவர்களிடம்

வழக்கு குறித்த விவரங்கள் கூறி ஆணையர் பார்வையிடும் விவரத்தை தெரிவித்து அறிவிப்பு கொடுத்ததை மனுதாரர்கள் ஏற்றுக்கொள்ளாமல் தங்கள் வழக்கறிஞர் மூலம் பார்த்துக்கொள்வதாக கூறிவிட்டனர். பின்னிட்டு ஆணையர் தாவா சொத்து அம்சங்களை பார்வையிட்டார். பின்பு மனுதாரர் தரப்பில் மீண்டும் ஆணையரை கூட்டிச் சென்று பார்வையிட எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் ஆணையர் தனது அறிக்கை வரைபடத்தை 11.03.2022 ம் தேதியில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டார்.

iv) இந்நிலையில் மனுதாரர்கள் ஆணையர் தங்களுக்கு அறிவிப்பு தராததால் தங்கள் தரப்பு அம்சங்களை காட்ட இயலவில்லை என்று கூறியுள்ளது உண்மைக்கு புறம்பானது. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையர் அறிக்கை வரைபடம் சி1, சி2 உண்மையானதும் ஏற்புடையதும் ஆகும். பின்னட்டு எதிர் வழக்குரை தாக்கல் செய்த பிரதிவாதிகள் ஆணையர் அறிக்கை குறித்து எவ்வித ஆட்சேபனை நடவடிக்கையும் எடுக்காமல் தாவா விசாரணைக்கு வந்து எதிர்மனுதாரர் வா.சா.1 ஆக முதல் விசாரணை தாக்கல் செய்த பிறகு தற்போது காலம் கடந்து தாக்கல் செய்துள்ள மனு தாவா விசாரணையை இழுத்தடிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாகும்.

v) தாவா தடம் சம்பந்தமாக ஏற்கனவே இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.317/2010 ல் ஆணையர் சர்வேயர் உதவியுடன் அளவீடுகள் செய்து அறிக்கை வரைபடம் தாக்கல் செய்துள்ளார். அதில் தடத்துக்கு தென்புறம் எதிர்மனுதாரரின் பூமி அத்தில் இருந்த உயிர்வேலியை குறிப்பிட்டுள்ளார். அந்த உயிர்வேலிக்கு வடபுறம் உள்ள தடப்பகுதி தான் க.ச.1050/2, க.ச 1052 லும் சேர்ந்தார்போல் உள்ள 13 அடி அகல தடம் என குறிப்பிட்டுள்ளார். அந்த ஆணையர் அறிக்கை வரைபடத்தின் அடிப்படையில் தான் அ.வ.எண்.317/2010

வழக்கு தீர்ப்பாணையின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட காங்கயம் சார்பு நீதிமன்ற ஏ.எஸ்.எண்.63/2017 ல் தீர்ப்பு பகரப்பட்டது.

vi) மேற்படி தீர்ப்பிலேயே பாரா 14 ல் எதிர்மனுதாரர் தடத்தின் தென்புறமுள்ள உயிர்வேலியை பராமரிக்கவேண்டும் என்றும் மனுதாரர்கள் தடத்தின் வடபுறம் கிழமேலாக உள்ள தென்னை மரங்களை பராமரித்து இருவரும் தாவா தடத்தின் அனுபவத்தை நிலைநாட்ட வேண்டுமென குறிப்பிட்டு இருவருக்கும் எதிராக நிலைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் எவ்வித மேல்முறையீடும் தாக்கல் செய்யப்படாததால் மேற்படி தீர்ப்பு இறுதியானதாகும். மேற்படி தென்னை மர அத்தை தான் இவ்வழக்கு ஆணையர் தன் வரைபடத்தில் சி, டி என காட்டியுள்ளார். எதிர்மனுதாரரின் உயிர்வேலியை ஏ, பி என காட்டியுள்ளார். மேற்படி இரண்டுக்கும் இடைப்பட்ட பகுதிதான் தடப்பகுதி ஆகும்.

vii) இந்நிலையில் எதிர்மனுதாரரின் தென்புற உயிர்வேலி சில பகுதிகள் காய்ந்து அதிலிருந்த கிழுவன்வேலி, வேப்பமரம், குன்னிமரம் ஆகியவற்றின் அடிக்கட்டைகள் அத்தாக இருந்து வந்தது. எதிர்மனுதாரர் தனது தென்புற பூமியில் மேயும் கால்நடைகள் வெளியில் செல்லாமல் இருக்கவேண்டும் என்பதற்காக மேற்படி ஏ, பி உயிர்வேலி அத்துக்கு தென்புறத்தில் புதிதாக நிலையான கம்பிவேலியை அத்தாக அமைத்துவிட்டார். அதைத்தான் ஆணையர் வரைபடத்தில் இ,எப்,ஜி,கெச் என காட்டியுள்ளார். மேற்படி கம்பிவேலியை மனுதாரர்கள் வேண்டுமென்றே உடைத்து இடையூறு விளைவிக்க முயற்சித்ததால் எதிர்மனுதாரர் இந்த தாவாவை நிலைக்கால உறுத்துக்கட்டளைக்கு தாக்கல் செய்துள்ளார்.

viii) மனுதாரர்கள் மீண்டும் தாவா சொத்தை அளவிட கோருவது முற்றிலும் சட்டத்திற்கு புறம்பானது. ஏற்கனவே ஆணையர் அளவீடு செய்து முந்தைய

வழக்கில் தாக்கல் செய்து அதில் மேல்முறையீட்டு வழக்கில் உரிய தீர்ப்பும் பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அதில் தாவா தடத்தின் வடபுறம் வாதியின் தென்னை மர வரிசைகளும் தாவா தடத்தின் தென்புறம் உயிர்வேலியும் அத்தாக நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் அடிப்படையில் தான் இந்த தாவாவும் முடிவு செய்யப்பட வேண்டியதாகும். எதிர்மனுதாரர் உயிர் வேலியை அகற்றி கம்பிவேலியை ஆக்கிரமித்து போட்டுள்ளதாக மனுதாரர்கள் கூறுவது முற்றிலும் பொய்யானது.

ix) ஏற்கனவே தாவா தடத்தின் வடபுற அத்து தென்னை மரம் என்றுள்ள நிலையில் அதை ஆணையர் சி, டி என குறிப்பிட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் ஆணையர் நியமனம் பெற்று சர்வே கற்களை மாற்றி அமைத்து, தனது தென்னை மர பகுதியில் தற்போது புதர் உருவாக்கிக் கொண்டு ஒரு தவறான அளவீட்டை நீதிமன்றத்திற்கு தெரிவிக்க எடுக்கும் முயற்சியே இந்த பொய்யான மனுவாகும். ஆணையர் தாவா தட அமைப்புகள் சம்பந்தமாக நீதிமன்ற உத்தரவுப்படி புகைப்படமும் எடுத்து இணைத்துள்ளார். எனவே இம்மனு ஏற்புடையதல்ல. இந்நீதிமன்றம் ஏற்கனவே இருக்கும் ஆணையர் அறிக்கை வரைபடம் மேல்முறையீட்டு தீர்ப்புரை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த வழக்கை முடிவு செய்ய இயலும். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இரு தரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

மேலும் மனுதாரர்கள் தரப்பில் CMP (MD) No. 1316/2022 and CMP (MD) No.5448/2022 R.M.Ponnusamy vs. G.Thangaraj என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்தீர்ப்புரை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:–**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் காங்கேயம் சார்பு நீதிமன்ற A.S.No.63/2017 தீர்ப்புக்கு மாறாக ஆணையர் அவர்கள் தமது அறிக்கையில் நிலவியலில் வண்டிப்பாதையாக இருப்பதை வண்டிப்பாதை என்று குறிப்பிடாமல் மண் தடம் என்று குறிப்பிட்டுள்ளார் என்றும் அதன் நீளம், அகலம் பற்றி அறிக்கையில் யாதொரு விபரமும் இல்லை என்றும் அசல் வழக்கில் மனுதாரர்களும் வழக்கறிஞர் மூலம் தோன்றிய பிறகு, இரு தரப்பிற்கும் அறிவிப்பு கொடுத்துவிட்டு தமது நிலவியல் ஸ்தலப் பார்வை செய்திருந்தால், மனுதாரர்கள் தரப்பு நியாயத்தையும், வழக்கிற்கு சம்பந்தப்பட்ட பொருண்மைகளை அறிக்கையில் குறிப்பிடவும் குறிப்புரை கொடுக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் என்றும் எனவே இந்த வழக்கில் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையரை அல்லது புதிய நீதிமன்ற ஆணையரை நியமித்தோ வழக்குச் சொத்துக்களை கிராம நிர்வாக அதிகாரி மற்றும் குறுவட்ட அளவையர் (சர்வேயர்) உதவியுடன் அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர்கள் மீண்டும் தாவா சொத்தை அளவிட கோருவது முற்றிலும் சட்டத்திற்கு புறம்பானது என்றும் ஏற்கனவே ஆணையர் அளவீடு செய்து முந்தைய வழக்கில்

தாக்கல் செய்து அதில் மேல்முறையீட்டு வழக்கில் உரிய தீர்ப்பும் பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்றும் ஆணையர் தாவா தட அமைப்புகள் சம்பந்தமாக நீதிமன்ற உத்தரவுப்படி புகைப்படமும் எடுத்து இணைத்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் ஏற்கனவே இருக்கும் ஆணையர் அறிக்கை வரைபடம் மேல்முறையீட்டு தீர்ப்புரை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த வழக்கை முடிவு செய்ய இயலும் என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்தின் இயற்கை அம்சங்களை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அனுமதி கோரி இ.ம.எண்.64/2022 மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு கடந்த 11.03.2022 அன்று நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு கடந்த 01.07.2022 அன்று 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இவ்வழக்கில் கடந்த 09.01.2023 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 26.11.2024 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் மற்றும் நீ.ம.சா.ஆ.1, 2 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, அசல் வழக்கானது வா.சா.1 ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்ட

நிலையில் கடந்த 06.01.2025 அன்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தற்போதைய ஆணையரையோ அல்லது புதிய ஆணையரையோ நியமித்து சேனாபதிபாளையம் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் குறுவட்ட அளவையர் ஆகியோர் உதவியுடன் வழக்கு சொத்தை அளவுகள் செய்தும், இயற்பியல் தன்மைகளை குறிப்பிட்டும் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது அ.வ.எண்.317/2010 என்ற வழக்கானது இம்மனுவின் 1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதியால் எதிர்மனுதாரர்/வாதி மீது தாவா சொத்தான கிழமேல் தடத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு கடந்த 05.02.2015 அன்று மேற்படி அசல் வழக்கானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. பின்னிட்டு 1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதியால் காங்கயம், மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் மேற்படி வழக்கின் தீர்ப்பாணையை எதிர்த்து A.S.No.63/2017 என்ற மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்து மேற்படி மேல்முறையீட்டு வழக்கானது கடந்த 04.10.2019 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

9. மேற்படி மாண்பமை காங்கயம் சார்பு நீதிமன்றத்தின் A.S.No.63/2017 வழக்கின் தீர்ப்பாணையை பரிசீலிக்கும்போது அதில் எதிர்மனுதாரர் தாவா 1வது அயிட்ட சொத்தில் மனுதாரரின் அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என்றும் உபயதரப்பினர்கள் 13 அடி அகலத்தில் உள்ள தாவா 2வது அயிட்ட சொத்தை அனுபவம் செய்வது பொறுத்து ஒருவருக்கொருவர் மற்றவர் அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கின் தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்துள்ளதாக உபய தரப்பினர்களால் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை.

10. மேலும் மாண்பமை காங்கயம் சார்பு நீதிமன்றத்தின் A.S.No.63/2017 வழக்கின் தீர்ப்புரையை பரிசீலிக்கும்போது அதில் பத்தி எண்.12 ல் மனுதாரர் பூமியில் உள்ள தென்னை மரங்களின் வரிசைக்கும் எதிர்மனுதாரர் பூமியில் உள்ள உயிர்வேலிக்கும் நடுவே 13 அடி அகலத்தில் தடம் உள்ளது என்றும் மற்றும் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தாவா 2 வது அயிட்ட சொத்தான தடமானது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் பூமிகளில் சரிசமமாக அமைந்திருக்கவில்லை என்று சர்வேயர் குறிப்பிட்டுள்ளதாக சொல்லப்பட்டு உபய தரப்பினர்கள் பூமிகளுக்கு நடுவே 13 அடி அகலத்தில் நிலையில் உள்ள தாவா தடத்தை மனுதாரரும், எதிர்மனுதாரரும் அனுபவம் செய்துகொள்ள உரிமை உள்ளது என்றும் எதிர்மனுதாரர் தனது பூமியில் உள்ள உயிர்வேலியையும் மனுதாரர் தனது பூமியில் உள்ள தென்னை மரங்களையும் முறையாக பராமரித்து தாவா தடத்தில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் அனுபவங்களுக்கு ஒருவருக்கொருவர் இடையூறு செய்யாமல் அனுபவம் செய்ய வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

11. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவற்றை பரிசீலிக்கும்போது அதில் பிரதிவாதிகள் வீட்டில் 1 முதல் 3 பிரதிவாதிகள் இருந்தார்கள் என்றும் அவர்களிடம் வழக்கு விபரங்களை கூறி அறிவிப்பு எடுத்துக்கொள்ளுமாறு தெரிவித்ததில் அவர்கள் அறிவிப்பை எடுத்துக்கொள்ள மறுத்து தங்களது வழக்கறிஞர் மூலம் பார்த்துக்கொள்வதாக தெரிவித்துவிட்டார்கள் என்றும் தாவா

மண் தடத்தை எனது வரைபடத்தில் ஏபிசிடி என குறிப்பிட்டு பிரவுன் நிறத்தில் குறிப்பிட்டு காட்டியுள்ளேன் என்றும் தாவா மண் தடத்தின் தென்புறம் ஏபி என குறிப்பிட்ட பகுதிக்குள் கிழுவன் வேலி மரங்கள் வேப்ப மரங்கள் ஆகியவை இடைவெளி விட்டுவிட்டும் குன்னி மரங்கள் கிழுவன் மரங்கள் சுமார் 3 அடி உயரத்தில் ஆங்காங்கே வெட்டப்பட்டும் மேலும் 3 பெரிய புற்றுகளும் காணப்பட்டது என்றும் தாவா ஏ பி தடத்தின் பகுதியை ஒட்டியே தென்புறம் ஏ என்ற பகுதியில் புதிதாக கம்பிவேலி அமைக்கப்பட்டிருந்தது என்றும் அதை EFGH என்று குறிப்பிட்டு சிவப்பு நிறத்தில் கோடிட்டு காட்டியுள்ளேன் என்றும் மேற்படி EFGH என்று குறிப்பிடப்பட்டுள்ள கம்பிவேலிக்கு தென்புறம் புதிதாக மண் சமன் செய்யப்பட்டு இருந்தது என்றும் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி பரிசீலனையில் இருந்து தாவா தடத்தின் தென்புறமுள்ள உயிர்வேலிக்கு தென்புறம் எதிர்மனுதாரரால் கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது என்று நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

12. மேலும் தாவா பாதை சம்பந்தமாக இம்மனுவின் 1ம் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.317/2010 என்ற வழக்கை தாக்கல் செய்ததில் தாவா தடத்தை ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு சர்வேயர் உதவியோடு அளவீடு செய்து அது குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்து மேற்படி வழக்கானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் அதை எதிர்த்து 1ம் மனுதாரரால் மாண்பமை காங்கயம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட A.S.No.63/2017 வழக்கின் தீர்ப்புரையில் மனுதாரர் பூமியில் உள்ள தென்னை மரங்களின் வரிசைக்கும் எதிர்மனுதாரர் பூமியில் உள்ள உயிர்வேலிக்கும் நடுவே 13 அடி அகலத்தில் தடம் உள்ளது என்றும் மற்றும் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தாவா தடமானது மனுதாரர்

மற்றும் எதிர்மனுதாரர் பூமிகளில் சரிசமமாக அமைந்திருக்கவில்லை என்றும் சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி A.S.No.63/2017 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக நாளது தேதிவரை உபய மனுதாரர்களால் எவ்வித மேல்முறையீடும் செய்யப்படாத நிலையில் மேலும் தாவா தடம் குறித்து இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரால் தாவா சொத்துக்கள் ஏற்கனவே பார்வையிடப்பட்டு அது குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்துக்களை மீண்டும் சர்வேயர் உதவியோடு நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து அது குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்வது இவ்வழக்கின் தீர்விற்கு எவ்விதத்திலும் உதவிகரமாக இருக்காது என்றும் மேற்கொண்டு அசல் வழக்கில் காலதாமதத்தை ஏற்படுத்தவே இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. எனவே மேலேகண்ட பரசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையில் தற்போதைய ஆணையரையோ அல்லது புதிய ஆணையரையோ நியமித்து சேனாபதிபாளையம் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் குறுவட்ட அளவையர் ஆகியோர் உதவியுடன் தாவா சொத்தை அளவீடு செய்து அது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட முன்தீர்ப்புரை கவனமாக பரிசீலிக்கப்பட்டது. மேற்படி முன்தீர்ப்புரை இம்மனுவின் சங்கதிகளுக்கு பொருந்துவதாக இல்லை.

14. எனவே மேலேகண்ட பரிசீலனைகளின் அடிப்படையிலும் விவாதங்களின் அடிப்படையிலும் அ.வ.எண்.317/2010 என்ற வழக்கை இந்நீதிமன்றத்தில் 1ம் மனுதாரர் தாக்கல் செய்து தாவா தடத்தை பொறுத்து ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு சர்வேயர் உதவியோடு அளவீடு செய்து அது குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவற்றை தாக்கல் செய்து மேற்படி வழக்கானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு அதை எதிர்த்து 1ம் மனுதாரரால் மாண்பமை காங்கயம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட A.S.No.63/2017 வழக்கின் தீர்ப்புரையில் மனுதாரர் பூமியில் உள்ள தென்னை மரங்களின் வரிசைக்கும் எதிர்மனுதாரர் பூமியில் உள்ள உயிர்வேலிக்கும் நடுவே 13 அடி அகலத்தில் தடம் உள்ளது என்றும் மற்றும் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தாவா தடமானது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் பூமிகளில் சரிசமமாக அமைந்திருக்கவில்லை என்றும் சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி A.S.No.63/2017 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக நாளது தேதிவரை உபய மனுதாரர்களால் எவ்வித மேல்முறையீடும் செய்யப்படாத நிலையில் மேற்படி ஆவணங்கள் மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா தடத்தை மீண்டும் சர்வேயர் உதவியோடு அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் ஏற்கும்படியாக இல்லை என்பதாலும் இம்மனு அசல் வழக்கை காலதாமதப்படுத்தவே மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.02.20 19:04:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.02.20 19:04:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.